**செய்தி வெளியீடு எண்:188** **நாள் : 29.04..2015**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி.எஸ்.கோகுல இந்திரா, அவர்கள் தலைமையில் ஜவுளி விற்பனையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் இன்று 29.04.2015 சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து சுமார் ரூ.102 இலட்சம் அளவிற்கு கைத்தறி பட்டு, லுங்கி மற்றும் கைக்குட்டை இரகங்கள் கொள்முதல் செய்த விற்பனையாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தின் கன்னியாகுமரி முதல் காஞ்சிபுரம் வரையிலான பல்வேறு பகுதிகளில் செயல்பட்டுவரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பல்வேறு வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், லுங்கி இரகங்கள், துண்டு இரகங்கள் வேட்டிகள், பெட்ஷீட், படுக்கை விரிப்புகள் மற்றும் வீட்டு உபயோக துணி இரகங்கள் ஜவுளி விற்பனையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன. மேற்படி கைத்தறி இரகங்களின் சிறப்பம்சங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தற்போது இருப்பிலுள்ள பட்டு மற்றும் பருத்தி இரகங்களை கொள்முதல் செய்தல் தொடர்பாக தமிழகத்திலுள்ள பிரசித்தி பெற்ற ஜவுளி விற்பனையாளர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவாக கலந்தாய்வு நடத்தப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த ஜவுளி விற்பனையாளர்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இருப்பிலுள்ள ஜவுளி இரகங்களைத் தேவைக்கேற்ப மொத்தக் கொள்முதல் செய்து, நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தொடர்வேலை வாய்ப்பு வழங்கி நெசவாளர்களின் வாழ்வாதாராத்தை உயர்த்த ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் கூடுதல் இயக்குநர் முனைவர் க.கர்ணன், இணை இயக்குநர்கள், சரக துணை / உதவி இயக்குநர்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**